உருதுவில் வெளியிட்டிருக்கிறார். மௌலானா முகம்மது உசேன் மாவி என்பவர் இரண்டு நூல்களை வெளியிட்டிருக்கிறார். முகம்மது யூசுப் கான் என்பவர் இரண்டு நூல்களை வெளியிட்டிருக்கிறார். ஜனாப் உஷா என்பவர் நான்கு நூல்களையும், ஜனாப் யூசுப் கோக்கன் என்பவர் ஆறு நூல்களையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, இஸ்லாமிய இலக்கியத்தில் மிகச் சிறப்புக்குரிய இலக்கிய நூல்கள் இன்னும் பலரிடத்தில் இருக்கின்றன. அவற்றை நம்முடைய அரசு பெற்றுவெளியிட முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பல்கலைக் கழக ஆராய்ச்சித்துறையே அவற்றைக் கவனிக்கலாம். சிறந்த தமிழ் நூல்களாக இருந்தால் தமிழ் வளர்ச்சித் துறை மூலம் பெறலாம். சிறந்த, முக்கியமான வரலாற்றுச் சிறப்புமிக்க நூல்களை வெளியிடுவதற்கு தமிழ் வளர்ச்சித் துறை சார்பாக ஓரளவு உதவி தருகிறார்கள். அந்த உதவி அடிப்படையில் செய்யலாம். அதற்குரியவர்கள் அரசை அந்த முறையில் அணுக வேண்டும்.

Nattalam High School

*267 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether there is any proposal under the consideration of the Government to upgrade the post of Headmaster of Nattalam Government High School, Kanyakumari district into a Gazetted one?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, நட்டலம் பள்ளிக்கூடத்தை அரசிதழ் பதவி உயர்வு பெற்ற தலைமையாசிரியரைக் கொண்ட பள்ளிக்கூடமாக மாற்றுவதற்கு வேண்டிய எண்ணிக்கை அங்கு இருக்கிறது அதை அரசிதழ் பதிவு தலைமையாசிரியரைக் கொண்ட உயர்நிலைப்பள்ளியாக ஆக்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியரை நியமிக்க வேண்டுமென்றால் அந்தப் பள்ளியில் குறைந்தது ஆயிரம் மாணவர்களாவது இருக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆனால், இந்தக் குறிப்பிட்ட பள்ளியில் 514 பேர் தான் இருக்கிறார்கள், என்ற காரணத்தால் அந்தப் பள்ளியை ஒரு அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியர் நியமிக்கின்ற பள்ளியாகக் கருதுவதற்கில்லை.